# சிட்டுக்குருவி

முதலிய பாடல்கள்

★

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

'பாலர் மலர்' நிர்வாகிகள்

புதுக்கோட்டை.

முதல் வெளியீடு: ஜனவரி 1949.

உரிமை பதிவு செய்யப் பெற்றது.

(தபால் செலவு தனி)

உங்களுக்காக
வள்ளியப்பாவின்
பாட்டுப் புத்தகங்கள்

மலரும் உள்ளம்

பாலர் பாடல்

குழந்தைக் குரல்

அச்சிட்டோர்:
கண்ணபிரான்,
புதுக்கோட்டை.

குழந்தைக் கவிஞர் யார் என்று கேட்டால்,
கள் எல்லோரிடமிருந்து வரும் ஒரே பதில்
். வள்ளியப்பா என்பதுதான்! ஏனென்றால்
ங்களுக்கெல்லாம் அவரை நன்றாகத் தெரியும்.
வர் தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை
ல்லாம் உங்களுக்காகவே ஒதுக்கி வைத்து,
ழைத்து வருகிறார்.

அவர் இதுவரை நூற்றுக் கணக்கான
டல்கள் எழுதியிருக்கிறார். அவருடைய
டல்கள் குழந்தைப் பத்திரிகைகளில் அடிக்
் வெளிவருகின்றன. நீங்களும் படித்துப்
டித்து மகிழ்கின்றீர்கள்.

அவைகளில் சிலவற்றைத் தொகுத்து இப்
த்தகத்தைக் வெளியிடுகிறோம். இதில் கதைப்
ாடல்கள் இருக்கின்றன; கருத்துள்ள பாடல்
் இருக்கின்றன; வேடிக்கைப் பாடல்கள்
ருக்கின்றன. எல்லாவற்றையும் எளிய
டையில், உங்களுக்குப் புரியும்படியாக எழுதி
ருக்கிறார்.

இந்தப் பாடல்களைத் தொகுத்து வெளியிட
னுமதி தந்த திரு. வள்ளியப்பா அவர்களுக்
ும், பல பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எங்கள்
ன்றி.

க்கோட்டை,
1—1—49.


தமிழ் நிலையத்தார்

குழந்தைகட்குத் தொண்டுசெய்யும்
குணமும் மிக்கவர்.
செழுந்தமிழில் கவிதை செய்யும்
திறமை பெற்றவர்.
அழுங்குழந்தை கூட நல்ல
ஆனந்தங் கொள்ளப்
பழந்தமிழில் பாட்டுப் பாடும்
பண்பும் பெற்றவர்.
பருகும்பாலும் குழந்தைகட்குப்
பாவில் தருபவர்.
பொறுமைமிக்க அவரின் பாக்கள்
பொறுக்கு மணிகளாம்.
கருணையுள்ள **வள்ளியப்பா**
கவிதை வாழ்கவே.
அருமையான கவிஞர் வள்ளி
யப்பா வாழ்கவே.

# பாட்டும் பக்கமும்



| | | |
|---|---|---|
| 1. | சிட்டுக் குருவி | 7 |
| 2. | காந்தி வழி | 9 |
| 3. | என் தெய்வம் | 11 |
| 4. | குழந்தைச் சண்டை | 13 |
| 5. | பாடும் பலனும் | 18 |
| 6. | நிச்சயம் | 20 |
| 7. | அழுத பிள்ளை | 22 |
| 8. | பூனை பூனை தான்! | 24 |
| 9. | யோசனை எப்படி? | 27 |
| 10. | என் பெயர் | 30 |

11. கடற்கரை 33
12. செத்த பின்னும் 38
13. மூட்டைப் பூச்சியே! 40
14. திருடன் கண்டது 42
15. கெட்ட குணங்கள் 45
16. உலகம் சுற்றிய தவளை! 47




சின்னச்சின்னப் பறவையான சிட்டுக்குருவி.
தேடித்தேடித் திரிவதென்ன? சிட்டுக்குருவி.
என்னவேண்டும்? என்னவேண்டும்? சிட்டுக்குருவி.
என்னிடம்நீ சொல்லவேண்டும், சிட்டுக்குருவி.

உணவுதேடித் திரிகின்றாயோ? சிட்டுக்குருவி.
ஊக்கமது கைவிடாத சிட்டுக்குருவி.
பணமும்வேண்டாம்,காசும்வேண்டாம் சிட்டுக்குருவி.
பச்சைநெல்லை நான் தருவேன், சிட்டுக்குருவி.




காந்தி சொன்ன வழிகளைக்
　　கடைப் பிடித்து நடந்திடின்,
சாந்தி எங்கும் நிலவிடும்.
　　சத்தி யந்தான் வென்றிடும்.

அன்பு ஓங்கி வளர்ந்திடும்.
　　அஹிம்சை என்றும் நிலைத்திடும்.
இன்ப வாழ்வு பெருகிடும்.
　　ஏழை துன்பம் ஒழிந்திடும்.

சாதிச் சண்டை தொலைந்திடும்.

தருமம் எங்கும் தழைத்திடும்.

நீதி எங்கும் நிலைத்திடும்.

பிறத்து வேஷம் நீங்கிடும்.

உலகில் அமைதி ஏற்படும்.

யுத்தம் யாவும் ஒழிந்திடும்.

கலகம் நீங்கி எங்குமே,

கருணை வெள்ளம் பெருகிடும்.





# என் தெய்வம்

அம்மா, அம்மா வருவாயே.
　　அன்பாய் முத்தம் தருவாயே.
அம்மா உன்னைக் கண்டாலே,
　　அழுகை ஓடிப் போய்விடுமே.


பத்து மாதம் சுமந்தாயே.
　　பாரில் என்னைப் பெற்றாயே.
பத்தி யங்கள் காத்தாயே.
　　பாடு பட்டு வளர்த்தாயே.



அழகு மிக்க சந்திரனை
　　ஆகா யத்தில் காண்பித்தே,

பழமும், பாலும் ஊட்டிடுவாய்.
பாட்டும், கதையும் கூறிடுவாய்.

தமிழைக் கற்றுத் தந்திடுவாய்.
'தத்துப் பித்'தெனப் பேசிடினும்,
'அமுதம் அமுதம்' என்றிடுவாய்.
அணைத்து முத்தம் தந்திடுவாய்.



எனக்குச் சிறுநோய் வந்தாலும்,
ஏனோ மிக்க வருந்துகிறாய்?
உணவும் இன்றி, உறங்காது,
உயிர்போல் என்னைக் காக்கின்றாய்

உன்னைப் போலே வளர்த்திடுவோர்,
உலகில் உண்டோ, வேறொருவர்?
என்னைக் காக்கும் அம்மாவே,
எனக்குத் தெய்வம் நீதானே.



# குழந்தைச் சண்டை



பட்டு என்ற பெண்ணுமே,
பார்ப்ப தற்கு அழகுடன்,
பட்டு ஆடை உடுத்தியே,
பாலு வீடு வந்தனள்.

ஒன்று சேர்ந்து இருவரும்
ஓடி ஆட வீதியில்,
அன்று ஏதோ சண்டையும்
அவர்க ளுக்குள் வந்ததே!


சண்டை தன்னில் பாலுவோ
தள்ளி விட்டான், பட்டுவை.
அண்டை ஓடும் சாக்கடை
அதனில் பட்டு வீழ்ந்தனள்.




பட்டு மீது கொட்டநீர்
பட்ட தாலே ஆடையும்,
கெட்டுப் போச்சு. 'ஓ'வெனக்
கிளம்ப லாச்சு, அழுகையும்.

பட்டு அழுது வருவதைப்
பார்த்த தாயும், அவளையே
கட்டி அணைத்துக் கொண்டனள்;
கார ணத்தை அறிந்தனள்.

வேக மாகப் பாலுவின்
வீடு நோக்கிச் சென்றனள்;
கோப மாகப் பாலுவை,
குற்றம் சாட்டி வைதனள்.



பட்டு தாயார் வைவதைப்
பாலு தாயார் கேட்பளோ?
திட்ட லானள், அவளுமே.
திரும்பச் சண்டை மூண்டதே.



இரண்டு தந்தை யார்களும்,
இந்தச் செய்தி கேட்டதும்,
திரண்ட தோளைத் தட்டியே,
தீர மாக வந்தனர்.




சண்டை வலுத்து விட்டது;
சத்தம் பெருக லானது;
கண்டு களிக்க மக்களும்,
கணக்கில் லாமல் கூடினர்.



கம்பு ஒன்றை ஊன்றியே,
கனிந்த வயதுப் பாட்டியும்
வம்பு மூண்ட அவ்விடம்
வந்து கூற லாயினள்:

"பிள்ளை போட்ட சண்டையைப்
பெரிது செய்யும் மக்களே,
சொல்லைக் கொஞ்சம் கேளுங்கள்.
சுத்த மூடச் செய்கையேன்?



சண்டை மறந்து பிள்ளைகள்
சரச மாக அன்புடன்
ஒன்று சேர்ந்து திரும்பவும்
ஓடி ஆடல் பாருங்கள்."

என்று கூற, அவர்களும்,
எதிரில் வந்து பார்த்தனர்.
அன்பு கொண்டு பிள்ளைகள்
ஆடல் கண்டு வெட்கினர்.

---

லியோ டால்ஸ்டாய் கதை ஒன்றைத் தழுவியது

---

# பாடுபட். பலனுண்டாம்




தோலை உரித்த பிறகுதான்,

சுளையைத் தின்று பார்க்கலாம்.

ஓட்டை உடைத்த பிறகுதான்,

உள்ளே பருப்பைக் காணலாம்.



உலையில் அரிசி வெந்துதா

உண்டு பசியைப் போக்கலாம்.


துணியைத் தைத்த பிறகுதான்,


சொக்காய் போட்டு மகிழலாம்.



எழுத்தைக் கற்ற பிறகுதான்,
ஏட்டைப் படித்து அறியலாம்.

பாடு பட்ட பிறகுதான்,
பலனைக் கண்டு மகிழலாம்.






# நிச்சயம்

வண்ணச் சோலை தன்னிலே,
வளரும் செடிகள் நிச்சயம்.
வளரும் செடிகள் மீதிலே,
மலர்கள் உண்டு, நிச்சயம்.

மலர்கள் தம்மைத் தேடியே,
வண்டு வருதல் நிச்சயம்.
வண்டு தேனை வாரியே,
கொண்டு போதல் நிச்சயம்.

கொண்டு சென்ற தேனினை,
கூட்டில் சேர்த்தல் நிச்சயம்.
கூடு தன்னை மாந்தர்கள்,
குலைத்து விடுதல், நிச்சயம்.

அழகு மிக்க கூட்டினை,
அழித்து, நல்ல தேனையே,
அடைய வேண்டின் சாகுமே,
ஆயிரம் உயிர், நிச்சயம்!





# அழுத பிள்ளை



அழுத பிள்ளை சிரிக்குமாம்.
அம்மா வந்தால் குதிக்குமாம்.
கழுத்தைக் கட்டிக் கொள்ளுமாம்.
'கலக' லென்று பேசுமாம்.

அரும்பு மலர்ந்து விரியுமாம்.
அருணன் வரவே சிரிக்குமாம்.
விரும்பி அணியச் செய்யுமாம்.
வீசி மணத்தைப் பரப்புமாம்.





மடியும் செடிகள் நிமிருமாம்.
மழையைக் கண்டு தழைக்குமாம்.
அடியி லுள்ள வேர்களும்,
ஆழ மாகச் செல்லுமாம்.


படுத்த கன்று எழும்புமாம்.
பசுவைக் கண்டு துள்ளுமாம்.
கொடுத்த பாலைச் சப்பியே,
குடித்துக் குதித்து ஓடுமாம்.





# பூனை பூனைதான்!

பாட்டி வீட்டில் ஒருபூனை
பலநா ளாக வசித்ததுவே.
ஊட்டும் பாலும் பழத்தையுமே,
உண்டு நன்கு கொழுத்ததுவே.




ஒருநாள், அறையில் கண்ணாடி
ஒன்று இருக்கக் கண்டதுவே.
விரைவாய் அருகில் சென்றதுவே.
விரைத்து அதனில் பார்த்ததுவே.

கறுத்த நீளக் கோடுகளும்,
கனத்த உடலும் கண்டதுமே,
"சிறுத்தை நான்தான். எவருக்கும்
சிறிதும் அஞ்சிட மாட்டேனே."

பூனை இப்படி எண்ணியதே.
புலிபோ லாக நினைத்ததுவே.
பானை, சட்டி யாவிலுமே,
பாய்ந்து, உடைத்து நொறுக்கியதே!

ஆட்டம் போட்டு வீட்டினையே,
அதிரச் செய்தது, புலிபோலே.
பாட்டி அங்கே வந்திடவே,
பாய்ந்தது, அவளின் மீதிலுமே!



பாட்டி கோபம் கொண்டனளே.
பக்கம் கிடந்த துடைப்பத்தால்,
போட்டாள், பூனை தலைமேலே,
'பொத்'தென உதைகள், புத்திவர.

அடியைத் தாங்க மாட்டாமல்,
அங்கே பூனை படுத்ததுவே.
"கொடிய புலிபோல் எண்ணியதே,
குற்றம், குற்றம், குற்றம்தான்.

பூனை என்றும் பூனைதான்.
புலிபோ லாக முடியாது."
தானே இங்ஙனம் எண்ணியதே.
சாது வாக மாறியதே.





# யோசனை எப்படி?

வேலன் காட்டு வழியாக
வெளியூர் சென்றான். அப்போது,

மரத்தை அடியில் வெட்டுகிற
மனிதன் ஒருவனைக் கண்டானே.

"இத்தனை பெரிய மரத்தைநீ
எப்படி எடுத்துச் செல்வாயோ?"

என்று கேட்ட வேலனிடம்,
"எப்படி எடுத்துச் செல்லுவதா!

அங்கே வண்டி நிற்கிறதே,
அதில்தான்" என்றான், அம்மனிதன்.

"போ, போ, புத்தி கெட்டவனே,
பிழைப்பது இப்படித் தானோ, நீ!

மரத்தைக் கீழே சாய்ப்பதுவாம்!
வண்டியில் பிறகு ஏற்றுவதாம்!

என்றன் சொல்லைக் கேட்டிடுவாய்.
எளிதில் காரியம் முடித்திடலாம்.




வண்டியை அருகே நிறுத்திடுவாய்.
மரத்தை அடியில் வெட்டிடுவாய்.

வெட்டிய மரத்தை வண்டியிலே
வீழ்ந்திடும் படிக்குச் செய்திடுவாய்.

எப்படி எனது யோசனை? சொல்"
என்று வேலன் கேட்டிடவே,

'சரி, சரி' என்று அம்மனிதன்,
தலையை ஆட்டி, மகிழ்வுடனே,



வண்டியை அருகில் நிறுத்திட்டான்.
மரத்தை வெட்டிச் சாய்த்திட்டான்.

'படபட' என்ற சப்தமுடன்,
பட்டென மரமும் சாய்ந்ததுவே.

மரத்தின் பழுவைத் தாங்காமல்
வண்டியும் 'அப்பளம்' ஆனதுவே!





# என் பெயர்

பச்சைக் குழந்தை என்றனுக்குப்
பக்குவமாகப் பெயர் வைக்க,
இச்சை கொண்டனர், பெரியோர்கள்.
என்னைச் சுற்றிக் கூடினர்கள்.



அம்மா உடனே, அவளுடைய
அப்பா பெயரைக் குறிப்பிட்டு,
சம்பந் தம்என அழைப்பதுவே
சரிப்படும் என்று கூறிட்டாள்.



"இல்லை, இல்லை என் அப்பா
பெயரைத் தான்நாம் இடவேண்டும்.
செல்லப் பன்என வைப்பதுதான்
சிறந்தது" என்றார், என் தந்தை.



"இரண்டும் வேண்டாம், பிள்ளைக்கு
ஏற்றது சாமிப் பெயரேதான்.
பரம சிவன்தான் நல்ல"தெனப்
பாட்டி உரக்கக் கூறினளே.




மூவரும் சண்டை போட்டார்கள்.

முடிவே இல்லை, ஆதலினால்,

மூவரும் சேர்ந்து என்றனுக்கு

முப்பெயர் இட்டு அழைத்தார்கள்.




அம்மா வுக்கு, சம்பந்தம்.

அப்பா வுக்கு, செல்லப்பன்.

பாட்டிக் கோ,நான் பரமசிவன்.

பள்ளியில் இனிமேல் எப்பெயரோ!





**வா**

கடற் கரைக்குச் சென்றிடலாம்
வா, தம்பி, வா—அங்கே,
காற்று வாங்கி வந்திடலாம்.
வா, தம்பி, வா.

உடல் வளர நல்லதடா
வா, தம்பி, வா—அந்த
உப்பங் காற்றின் சக்தியடா,
வா, தம்பி, வா.

வெள்ளை மணல் மீதிருப்போம்
வா, தம்பி, வா—சற்றே
விளையாடித் திரும்பிடுவோம்
வா, தம்பி, வா.

பிள்ளைகளும் வந்திடுவார்
வா, தம்பி, வா—அங்கே
பெரியவரும் கூடிடுவார்
வா, தம்பி, வா.




# பார்

கடலின் மீது செல்லுங்கப்பல்
பார், தம்பி, பார்—அதைக்
காணப் பலர் வருவதையே,
பார், தம்பி, பார்.

'தடத' டென்று அலைகள் வந்து,
பார், தம்பி, பார்—காலைத்
தழுவி விட்டுப் போவதையே,
பார், தம்பி, பார்.

சங்கும் நல்ல கிளிஞ்சில்களும்
பார் தம்பி, பார்—இங்கே
சரள மாகக் கிடைக்குதடா,
பார், தம்பி, பார்.

பொங்கு கின்ற பாலினைப்போல்
பார் தம்பி, பார்—இங்கே
தங்கி நிற்கும் நுரையிருக்கு
பார், தம்பி, பார்.



## கேள்

முத்து நல்ல முத்துக்களாம்,
கேள், தம்பி, கேள்—உள்ளே
மூழ்கி, மூழ்கி எடுத்திடுவார்
கேள், தம்பி, கேள்.

எத்தனையோ மீன் வகைகள்
கேள், தம்பி, கேள்—இங்கே
எண்ண யாரால் முடியுமென்றே
கேள், தம்பி, கேள்.


மழையே பெய்யா திருந்திடினும்,
கேள், தம்பி, கேள்—கடல்
வரண்டு போவ தில்லையடா
கேள், தம்பி, கேள்.

அலைகள் போடும் சப்தமடா
கேள், தம்பி, கேள்—அதை
அடக்க யாரால் முடியுமென்றே
கேள், தம்பி, கேள்.







# செத்த பின்னும்




செத்த மாட்டுத் தோலினுல்,
செய்ய லாமே, செருப்புகள்.

செத்த ஆட்டு மயிரினுல்;
செய்ய லாமே, கம்பளி.

செத்த எருமைக் கொம்பினுல்,
செய்ய லாமே, சீப்புகள்.




செத்த யானைத் தந்தத்தால்,
செய்ய லாமே, பொருள்களும்.




செத்த பாம்புத் தோலிலும்,
செய்ய லாமே, பைகளை.

செத்த மனிதன் உடலிலே,
செய்ய என்ன உள்ளதோ?


செருப்புக் கூடத் தைத்திட,
தீண்டு வோரும் இல்லையே!







படுத்து உறங்கும் போதிலே,
பயமில் லாமல் என்னையே,
கடித்து எழுப்பும் மூட்டையே,
காலம் கிட்டி விட்டதோ?

இரத்தம் உடலில் ஊறவே,
ஏது, ஏதோ மருந்துகள்
சிரத்தை யோடு தின்பதும்,
தினமும் உன்னை வளர்க்கவோ?



இரவில் விழிக்கச் செய்கிறாய்.
இரத்தம் எல்லாம் குடிக்கிறாய்.
பரவும் உன்றன் வம்சமே,
படுத்தும் பாடு கொஞ்சமோ?

இருக்கும் இடத்தைத் தேடியே,
இஷ்டத் தோடு வருகிறாய்.
நறுக்கு நறுக்கு என்றுநீ
நன்கு கடித்து விடுகிறாய்.



படுக்கும் மெத்தை, குரிச்சிகள்,
பாய்கள், பெஞ்சு யாவிலும்,
இடுக்கில் இருந்து கொண்டுநீ
என்னைக் கடித்து விடுகிறாய்!

இலையைப் போல இருந்தநீ
'இட்லி' போலப் பருக்கிறாய்.
கொலைதான் செய்யப் போகிறேன்,
கொடிய மூட்டைப் பூச்சியே!



திருடன் ஒருவன் இரவிலே,
திருட எண்ணங் கொண்டனன்.
அருகில் உள்ள ஊரையே,
அடைந்து திருட எண்ணினன்.

வயலின் நடுவே வழியினில்,
மனிதன் நிற்கக் கண்டனன்.
பயந்து அங்கே நின்றனன்.
பதுங்கி மறைவில் ஒளிந்தனன்.

அந்த மனிதன் நடுவிலே,
அசைந்தி டாது நிற்கவே,
எந்த வழியில். செல்வது?
என்று எண்ணிப் பார்த்தனன்.

போக வழியும் இல்லையே,
பொறுமை பறந்து போனதே.
வேக மாகத் தடியுடன்,
'விறுவி'றென்று சென்றனன்.

தடியால் அந்த மனிதனைத்
தலையில் ஓங்கி அடித்தனன்.
அடிமேல் அடியும் வைத்தனன்.
ஆனால், அந்த மனிதனோ?

தாக்க வந்த திருடனைத்
தடுத்து விடவும் இல்லையே!
ஊக்க மாகத் திருப்பியே,
உதைக்கத் தானும் இல்லையே!

'குய்யோ, முறையோ' என்றுமே,
குதித்து ஓட வில்லையே!
'ஐயோ' என்று அலறியே,
அழவும் இல்லை, இல்லையே!

அடித்து அடித்துக் கையுமே,
அலுத்துப் போன திருடனும்,
"தடித்த தோலை உடையவன்,
தடியன் இவனும் யார்?"எனக்

கிட்டச் சென்று அவனையே,
தொட்டுப் பார்த்த உடனேயே,
வெட்கப் பட்டுச் சிரித்தனன்!
விஷயம் என்ன தெரியுமோ?

மனிதன் இல்லை, அவ்விடம்!
மரமும் இல்லை. ஐயயோ,
துணியா லான உருவம்தான்?
சோளக் கொல்லைப் பதுமையே!



# கெட்ட குணங்கள்

★



ஒட்டுக் கேட்டு ரகசியம்
ஊரில் எங்கும் சொல்லுதல்,
கெட்ட குணத்தில் ஒன்றடா.
கேட்பாய், இன்னும் கூறுவேன்.



வேறு ஒருவர் பெயருக்கு,
விலாச மிட்ட கடிதத்தை,
யாரும் அறியா வேளையில்
எடுத்துப் பார்த்தல் கெடுதலாம்.

நண்பன் குற்றம் செய்திடின்,
நயந்து கூறித் திருத்தலாம்.
புண்ப டுத்தும் முறையிலே,
போதித் திடுதல் கெடுதலாம்.

ஆட்டம் தன்னில் தோற்றிடின்
ஆத்தி ரம்நீ கொள்வதேன்?
வாட்ட மாக முகத்தினை
வைத்துக் கொள்ளல் கெடுதலாம்.

தீய வழியில் செல்கையில்,
திருத்த முயற்சி செய்திடும்,
தூய நண்பன் மீதுநீ
துவேஷம் கொள்ளல் கெடுதலாம்.

செவிடர், குருடர், மூடவர்க்கு
செய்வாய் நல்ல உதவிகள்.
அவரைக் கேலி செய்வதோ,
அதிகக் கெட்ட செய்கையாம்.



# உலகம் சுற்றிய தவளை!

★

சிறிய கிணறு ஒன்றிலே,
ஜீவித் திருந்த தவளையும்,
பெரிய உலகைக் காணவே
பெரிதும் ஆசை கொண்டதே.

எண்ணம் போல உலகையே,
எளிதில் காண வேண்டியே;
தண்ணீர் இறைக்கும் வாளியில்
தாவி ஒருநாள் வந்ததே.

வெளியே வாளி வந்ததும்,
விரைந்து தரையில் தாவியே,
வழியின் நெடுகச் சென்றதே.
வயலும், வரப்பும் கண்டதே.

வழியில் உள்ள குளத்திலே,
வாத்து ஒன்று நின்றதே.
எளிதில் வாத்து தவளையை
எட்டி, ஐயோ, பிடித்ததே.

# உலகம் சுற்றிய தவளை!


★

சிறிய கிணறு ஒன்றிலே,
ஜீவித் திருந்த தவளையும்,
பெரிய உலகைக் காணவே
பெரிதும் ஆசை கொண்டதே.

எண்ணம் போல உலகையே,
எளிதில் காண வேண்டியே;
தண்ணீர் இறைக்கும் வாளியில்
தாவி ஒருநாள் வந்ததே.

வெளியே வாளி வந்ததும்,
விரைந்து தரையில் தாவியே,
வழியின் நெடுகச் சென்றதே.
வயலும், வரப்பும் கண்டதே.

வழியில் உள்ள குளத்திலே,
வாத்து ஒன்று நின்றதே.
எளிதில் வாத்து தவளையை
எட்டி, ஐயோ, பிடித்ததே.



பெரிய உலகைக் காணவே,
பெரிதும் ஆசை கொண்டதை,
சிறிய வாத்து வயிற்றிலே
செலுத்தி ஏப்பம் விட்டதே!

——(0)——

